செய்தி வெளியீடு எண் 941 நாள் 5.12.2009

# ஒகேனக்கல் குடிநீர் திட்ட செயலாக்கம் தொடர்பாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆய்வு

*****

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 6755 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 29.8 இலட்சம் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட மற்றும் தரமான குடிநீர் வழங்குவதற்காக ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்பு திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவியுடன் 1334 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தருமபுரியிலிருந்து, 45 கி.மீ. தூரத்தில் ஓடும் காவிரியாற்றினை நீராதாரமாகக் கொண்டு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக இந்திய ஆட்சிப் பணி நிலையிலுள்ள திட்ட இயக்குநர் மற்றும் இணை மேலாண்மை இயக்குநர் 9.11.2007 அன்று நியமிக்கப்பட்டார்.

இத்திட்டப் பணிகளை கண்காணிக்கவும், மற்றும் அரசுடன் இணைந்து பிற துறைகளின் ஒத்துழைப்பு பெறவும் திட்ட மேலாண்மைப் பிரிவு வாரிய தலைமை அலுவலகம் சென்னையில் 11.02.2008ல் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக திட்ட செயலாக்கப் பிரிவு அலுவலகம் 12.02.2008 அன்று தருமபுரியில் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 26.02.2008 அன்று தருமபுரியில் அடிக்கல் நாட்டப்பட்டது.

திட்ட மேலாண்மை ஆலோசகராக நிப்பான் கோயி கம்பெனி லிமிடெட், ஜப்பான் நிறுவனம் நியமிக்கப்பட்டு 03.10.2008 முதல் திட்ட மேலாண்மைப் பணி துவங்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போதைய விலை மதிப்பீட்டின்படியும், இறுதி வடிவமைப்பின்படியும் ஒகேனக்கல் குடிநீர் திட்டத்தின் திருத்திய மதிப்பீடு ரூபாய் 1928.80 கோடியாகும்.

இத்திட்டத்தின் செயலாக்கப்பணிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 5.12.2009 அன்று ஆய்வு செய்தார்கள்.

திட்டப்பணிகள் 5 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, முன் தகுதிகாண் விண்ணப்பங்கள் பெற நவம்பர் 2008–ல் விளம்பரப்படுத்தப்பட்டு, நான்கு தொகுப்புகளுக்கான முன் தகுதிகாண் ஒப்பந்தக்காரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், இதர ஒரு தொகுப்புக்கான முன் தகுதிகாண் ஒப்பந்தக்காரர்கள் தேர்வு செய்யும் பணி பரிசீலனையில் உளளது எனவும், தகுவ வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஸ்வரன்சிங், இ.ஆ.ப., தெரிவித்தார்.

தொகுப்பு ஒன்றுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் நவம்பர் 2009–ல் பெறப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு உள்ளது.

தொகுப்பு–2, 3 மற்றும் 5 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெற 2009 டிசம்பர் மாத இறுதிக்குள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரசு அறிவித்தபடி களப்பணிகள் மார்ச் 2010ல் துவங்கப்பட திட்டமிட்டபடி அனைத்து பணிகளும் டிசம்பர் 2012க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவர மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வில் நகராட்சி நிர்வாகத் துறை செயலாளர் டாக்டர்.நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., சென்னை மின்சார வாரிய தலைவர் திரு.சி.பி.சிங், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திட்ட இயக்குநர் மற்றும் இணை மேலாண்மை இயக்குநர் திரு.பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப., மற்றும் குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, தலைமைச் செயலகம்,
சென்னை 9.